Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 279

செவ்வாய்க்கிழமை
02 செப்ரெம்பர் 2025

ஆவணி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## மயிலிட்டித் துறைமுகத்தில் மூன்றாம் கட்ட அபிவிருத்தி

யாழ்ப்பாணம், செப். 2
மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் நேற்றுத் திங்கட்கிழமை காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. மயிலிட்டித்துறை 11

இலங்கை வரலாற்றில் முதல் ஜனாதிபதியாக

# கச்சதீவுக்குள் நேற்று கால்வைத்தார் அநுர

## இந்தியாவுக்கான மறைமுக எச்சரிக்கையா?



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 2
கச்சதீவு தொடர்பில் தமிழகத்தில் அண்மைக்காலமாகப் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுமாலை கச்சதீவுக்குப் பயணம் மேற்கொண்டார். நிகழ்ச்சி நிரலில் இல்லாத, திடீர்ப் பயணமாக இது அமைந்தது. 10

ஜனாதிபதி அநுரவால் நேற்று

## யாழ். பொதுநூலகத்தின் இணையத்தளம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஜனாதிபதி அநுரவால் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. 11



## ஜனாதிபதியின் வருகையால் பொதுமக்கள் விரட்டியடிப்பு!

நீதிகோரிய வயோதிபர்களிடம் பொலிஸார் அராஜகச் செயல்!

யாழ்ப்பாணம், செப். 2
இராணுவத்தின் பிடியில் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, யாழ்ப்பாணம் - மயிலிட்டிப் பகுதியில் நேற்றுக்காலை ஒன்று 11

மண்டைதீவில் நேற்று

## சர்வதேச கிரிக்கெட் மைதானம்; அடிக்கல் நட்டார் ஜனாதிபதி!

யாழ்ப்பாணம், செப். 2
மண்டைதீவில் அமைக்கத் திட்டமிட்டுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் பணிகள் ஜனாதிபதி அநுரவால் நேற்று ஆரம்பித்துவைக்கப் 10

அநுரவின் நிகழ்வில்

## ஓரங்கட்டப்பட்டனர் ஊடகவியலாளர்கள்

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர நேற்றுப் பங்கெடுத்த நிகழ்வுகளில் ஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் குடிவரவு - குடியல்வுத் திணைக்கள 11



மண்டைதீவு மைதானத்தில்

## மூன்று வருடங்களில் சர்வதேசப் போட்டி!

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில், இந்த வருடத்தின் இறுதிக்குள் கிரிக்கெட் போட்டியொன்று நடத்தப்படும் என்றும், இன்னும் மூன்று வருடங்களில் முதலாவது சர்வதேசப் போட்டி நடைபெறும் என்றும் ஜனாதிபதி அநுர 11

## தமிழ்மொழிக்கு முன்னுரிமை ஜனாதிபதியின் பெயர் இல்லை

அபிவிருத்தித் திட்டங்களில் கவனமீர்த்த பெயர்ப்பலகைகள்

விரிவு பக்கம்:- 11

## கடவுச்சீட்டு அலுவலகம் யாழில் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 2
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வளாகத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் 11

## புலனாய்வு அதிகாரிகளுக்கு 'தண்ணிகாட்டிய' ஜனாதிபதி

யாழ்ப்பாணம், செப். 2
ஜனாதிபதி அநுரகுமார யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த நிலையில், அவர் எப்போது யாழ்ப்பாணம் வருகின்றார்? யாழ்ப்பாணத்தில் எங்கு தங்கியிருக்கின்றார்? என்ற விடயம் புலனாய்வு 11

விசேட அதிரடிப் படையின்

## துப்பாக்கிச் சூட்டில் குடும்பத்தலைவர் பலி



வவுனியா, செப். 2
வவுனியா எல்லைப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் ஒருவர் சிகிச்சையின்போது 11

### முச்சந்தி முரளி

'அப்ப இனி பக்கத்துநாட்டுக்காரர் கச்சையைக் கட்டிக்கொண்டு கம்பு சுத்தப்போகினம் கண்டியளோ'

## போரின்போது கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்க நடவடிக்கை

ஜனாதிபதி அநுர வாக்குறுதி

விரிவு பக்கம்:- 11

## அநுரவின் நிகழ்வில் ஆக்கிரமிப்புப் பிக்கு!

யாழ்ப்பாணம், செப். 2
ஜனாதிபதி அநுரவால் மண்டைதீவில் யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி: 01.09.2025 | திகதி: 01.09.2025 | திகதி: 01.09.2025 | திகதி: 01.09.2025 | திகதி: 01.09.2025 | திகதி: 01.09.2025 | திகதி: 01.09.2025 | திகதி: 01.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம்: 4181 | சீட்டிழுப்பு இலக்கம்: 1248 | சீட்டிழுப்பு இலக்கம்: 0207 | சீட்டிழுப்பு இலக்கம்: 2287 | சீட்டிழுப்பு இலக்கம்: 5939 | சீட்டிழுப்பு இலக்கம்: 1969 | சீட்டிழுப்பு இலக்கம்: 0514 | சீட்டிழுப்பு இலக்கம்: 0055 |
| ஆங்கில எழுத்து: W | வெற்றி இலக்கினம்: ரிஷபம் | ஆங்கில எழுத்து: H | ஆங்கில எழுத்து: P | ஆங்கில எழுத்து: E | ஆங்கில எழுத்து: W | ஆங்கில எழுத்து: E | வெற்றி இலக்கினம்: துலாம் |
| | | | சுப்பர் இலக்கம்: 03 | | | | |
| வெற்றி இலக்கங்கள்: 10 28 44 59 | வெற்றி இலக்கங்கள்: 09 24 52 53 | வெற்றி இலக்கங்கள்: 3 1 6 1 | வெற்றி இலக்கங்கள்: 09 22 23 27 | வெற்றி இலக்கங்கள்: 5 9 7 3 9 5 | வெற்றி இலக்கங்கள்: 17 27 37 66 | வெற்றி இலக்கங்கள்: 7 3 9 5 | வெற்றி இலக்கங்கள்: 03 24 27 42 |
| விசேட எழுத்து: W | | | | | விசேட எழுத்து: W | | |

# மாகாணத் தேர்தலை நடத்த பின்னடிக்கிறது அரசாங்கம்

## ஹர்ஷன ராஜகருணா குற்றச்சாட்டு

**கொழும்பு, செப்.2**

**அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறது. மாகாண சபைச் சட்டத்தில் இலகுவாகத் திருத்தம் செய்யமுடியும். ஆகையால் விரைவாக மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித் துள்ளதாவது:-

அரசாங்கத்தின் அடக்குமுறை களுக்கு எதிராகவே நாம் ஒன்றி ணைந்துள்ளோம். அதற்கு சக லரதும் ஒத்துழைப்பையும் பெற முயற்சிக்கின்றோம். இது அனை வரையும் இணைத்துக்கொண்டு தேர்தலில் களமிறங்குவதற் கான பயணம் அல்ல. எதிர்க்கட்சிகளை மௌனமாக்கு வதே அரசாங்கத்தின் நோக்கமா கும். மாகாணசபைத் தேர்தலை நடத்துவது அரசாங்கத்துக் குள்ள பெரும் சவால். பிரதேச சபைத் தேர்தலில் அரசாங்கம் பல இலட்சம் வாக்குகளை இழந் துள்ளது. இந்த அச்சத்தால் மாகாணசபைத் தேர்தல் மேலும் காலம் தாழ்த்தப்படக்கூடும். விரைவில் மாகாணசபைத் தேர் தலை நடத்துவதற்கு நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்து கின்றோம்.

கொள்கை ரீதியில் எம்மோடு இணையக்கூடிய அனைவரை யும் இணைத்துக்கொண்டு பய ணிக்கத் தயாராக இருக்கின் றோம் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி: 01.09.2025 | தினம்: திங்கட்கிழமை | வெற்றி வாரம்: 0647 | |
| ஆங்கில எழுத்து: X | வெற்றி இலக்கம்: 7 3 4 3 9 2 | | |
| **Super Ball** | | | |
| திகதி: 01.09.2025 | தினம்: திங்கட்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம்: 2913 | ஆங்கில எழுத்து: J | வெற்றி இலக்கம்: 08 33 38 41 | |
| **சனிதா** | | | |
| திகதி: 01.09.2025 | தினம்: திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து: S | வெற்றி இலக்கம்: 14 36 55 71 | வெற்றி வாரம்: 5074 | |
| **லக்ன ராசி** | | | |
| திகதி: 01.09.2025 | தினம்: திங்கட்கிழமை | | |
| கன்னி | வெற்றி இலக்கம்: 11 24 45 52 | சீட்டிழுப்பு வாரம்: 4625 | |
| **KAPRUKA** | | | |
| திகதி: 01.09.2025 | தினம்: திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து: L | சுப்பர் இலக்கம்: 01 | வெற்றி இலக்கம்: 35 39 47 55 | வெற்றி வாரம்: 2089 |
| **அத கோடிபதி** | | | |
| திகதி: 01.09.2025 | தினம்: திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து: M | வெற்றி இலக்கம்: 22 36 40 76 | வெற்றி வாரம்: 2732 | |
| **JAYODA** | | | |
| திகதி: 01.09.2025 | தினம்: திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து: C | வெற்றி இலக்கம்: 08 09 20 27 | வெற்றி வாரம்: 2157 | |

# விவசாயிகளது உரிமை பறிக்கப்படுவது அநீதி!

## *எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 2


தற்போதைய அரசாங்கம் விவசாயிகளின் வாழும் உரிமையையும், பயிர் செய்யும் உரிமையையும் பறித் துவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தின் கவ னத்துக்குக் கொண்டுவரவுள்ளேன். விவசாயிகள் மானியங்களையோ அல்லது நிதியுதவிகளையோ கேட்கவில்லை. பல தசாப்தங்களாக தாங்கள் பயிரிட்டு வரும் நிலத்தின் மீதான உரிமையைக் கேட்கின்றனர்.

சோளம், தர்ப்பூசணி மற்றும் வெண்டிக்காய் ஆகியவற் றைப் பயிரிடுகின்ற 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை யான குடும்பங்கள், 25 ஆயிரம் ஏக்கரில் பல தசாப் தங்களாகப் பாரம்பரியமாகப் பயிரிட்டுவருகின்றனர். அவர்கள் தமது சேனைப் பயிர்ச் செய்கையின் நிலத் துக்கான உரிமையைக் கோரி நிற்கின்றனர்.

இந்த விவசாயிகள் வாழும் உரிமை, வாழ்வாதாரம் மற்றும் விவசாயம் செய்யும் உரிமை என்பன பறிக்கப் படுகின்றன - என்றார். (ச-இ)



## கோப்பாய், சாவகச்சேரி

# புதிய செயலர்களுக்கு நியமனக் கடிதங்கள்!

யாழ்ப்பாணம், செப். 2

கோப்பாய், சாவகச்சேரிப் பிரதேச செயலகங் களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிதாக கோப்பாய்ப் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட ஈ.தயாரூபனும், சாவகச்சேரிப் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட எவ். சி.சத்தியசோதியும் நேற்று திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் வைத்து மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிர தீபனிடம் தமக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர். (ச-66,28,9)

# பாதாளக்குழுவினரின் சொத்துகள் முடக்கம்

கொழும்பு, செப். 2

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் சொத்துகளை முடக்கத்தேவையான உத்தரவுகளைப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் இரகசிய நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட கெஹெல்பத்தர பத்மே, கமாண்டோ சாலிந்த உட்பட பல திட்டமிட்ட குற்றவாளிகள், டுபாய், இந்தியா மற் றும் பிற நாடுகளில் தலைமறைவாகி, இந்த நாட்டில் பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல், கொலை மற்றும் பிற திட்டமிட்ட குற்றங்களைச் செய்து சட்டவிரோதமாகச் சம்பாதித்த பணத்தில் பல அசையும் மற்றும் அசையா சொத்துகளை வாங்கியுள்ளமை தற்போது கண்டறியப் பட்டுள்ளது.

அவர்களின் சொத்துகளில் ஆடம்பர வீடுகள், மதிப்புமிக்க நிலங்கள், ஹோட்டல்கள், சொகுசு கார்கள், தங்கம் மற்றும் பல சொத்துகள் அடங்கும் எனக் கூறப்படுகிறது. கோடிக் கணக்கான ரூபா மதிப்புள்ள அந்தச் சொத்துகளைப் பறி முதல் செய்யத் தேவையான சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும், அரசியல்வாதிகள் மற்றும் சக்திவாய்ந்த நபர்களின் பெயர்களில் சொத்துகள் வாங்கப்பட்டுள்ளதா என் பது தொடர்பான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நீல நிற பஸ்ஸை வைத்து ஆட்சி நடத்துகிறது அரசு



## சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

நீலநிற பஸ்ஸைக் காண்பித்து இந்த அரசாங்கம் ஆட்சி நடத்து கின்றது. அந்த நீல நிற பஸ் ஒரு தரப்பினரை மட்டுமே இலக்கு வைத்துப் பயணிக்கின்றது. பொலிஸ், நீதித்துறைச் சுதந்தி ரத்தில் தலையிடாது இந்த நட வடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரம வீரக்கொடி தெரிவித்துள் ளார். அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

பாதாள உலகக் குழுக்கள் கட்டுப் படுத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக வுள்ளோம். அன்று நாடாளுமன் றத்தில் ஆலோசனை தெரிவுக் குழுக்களில் அதற்காக நாம் குரல் கொடுத்தோம். அன்றைய கால கட்டத்தில் மாகந்துரே மதுஷ் போன்றோர் கைதுசெய்யப்பட்ட னர். ஆனால் இவ்வாறு ஊடகப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட வில்லை. பாதாள உலகக் குழுக்க ளுடன்எதிர்க்கட்சிகளுக்குத்தொடர் புள்ளது என்று அரசாங்கம் கூறி யது. அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தவேண்டும். ஆதா ரம் இன்றிக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை ஏற்றுக்கொள் ளமுடியாது -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தலையீடு இன்றி சட்டம் நிலைநாட்டப்படும்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

**நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு அரசமைப்பின் ஊடாக எனக்கு முழுமையான அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனது கைகள் கட்டப்படவில்லை. அரசியல் தலையீடுகளுமில்லை. வழங்கிய பொறுப்பை முறையாக நிறைவேற்றுவேன் எனப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

சட்டம் மற்றும் ஒழுங்கு, பாதாளக் குழுக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் தனியார் தொலைக்காட்சி அலைவரிசை நிகழ்வொன்றில் கருத்துத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டிய பிரதான பொறுப்பு பொலிஸ் பிரிவுக்கு உண்டு. ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளைக் காட்டிலும் பொதுமக்கள் பொலிஸாருடன்தான் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள். ஆகவே பொலிஸார் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கவேண்டும்.

நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சட்டம் மற்றும் ஒழுங்கை முறையாகச் செயற்படுத்த எடுக்கும் தீர்மானங்களைப் பொலிஸ் அதிகாரிகள் உட்பட உத்தியோகத்தர்கள் அனைவரும் முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். முறையாகச் செயற்படாதவர்களுக்கு எதிராகச் சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

# டுபாய்க்குத் தப்பிய இஷாரா செவ்வந்தி?

## பத்மே பகிர் தகவல்

கொழும்பு, செப். 2

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பாதாள உலகத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில் கைதுசெய்யத் தேடப்படும் இஷாரா செவ்வந்தி, குற்றம் நடந்த அதேநேரத்தில் டுபாய்க்குத் தப்பிச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பாதாள உலகத் தலைவரான கெஹல்பத்தர பத்மேயிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இஷாரா செவ்வந்தி டுபாய்க்குத் தப்பிச்சென்றபோது கெஹல்பத்தர பத்மேவும் அவரது குழுவினரும் வேறொரு நாட்டில் இருந்துள்ளனர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சட்டத்தரணி வேடமணிந்த இஷாரா செவ்வந்தி, சட்டப் புத்தகத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை நீதிமன்ற அறைக்குள் கொண்டுவந்து துப்பாக்கிச்சூடு நடத்தியவரிடம் கொடுத்தார் எனக் கூறப்படுகிறது.

பத்மே வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இஷாரா வெளிநாடு சென்றுள்ளார் என்று கூறப்பட்டாலும், அவர் இன்னும் நாட்டில் ஒளிந்துகொண்டிருக்கிறாரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளைத் தொடர்கின்றனர் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# பத்மே உள்ளிட்ட ஐவர் 72 மணிநேரத்தடுப்பில்

கொழும்பு, செப். 2

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் ஐவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் 72 மணிநேரத் தடுப்பு காவல் உத்தரவுக்கமைய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் இரண்டு இடங்களில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 27 ஆம் திகதி இந்தோனேசியாவில் கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட 5 பேர் அந்த நாட்டுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்புக்கு மத்தியில் இலங்கைப் பொலிஸார் பொறுப்பேற்று இலங்கைக்கு விமானம் ஊடாகக் கொண்டுவரப்பட்டனர். (ச-இ)



# வென்னப்புவவில் துப்பாக்கிச்சூடு; மூவர் கைது

கொழும்பு, செப்.2

வென்னப்புவவில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில், மற்றொருவர் காயமடைந்துள்ளார். (எ-இ)

# போதைப்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, செப்.2

ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹேஷ் போதைப் பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கல்கிஸ்ஸை குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 1.05 கிலோகிராம் ஹேஷ் போதைப்பொ[illegible] தேகிக்கப்படு[illegible] பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)




# அநுர எங்க போட்டார்?

இயமனுக்கே இடியப்பம் தீத்தின ஆக்கள் உந்த இன்ரலிஜெண்ட்காரர். அப்பிடிப்பட்ட இன்ரெலிஜெண்ட்காரருக்கே இடியப்பம் தீத்திப் பேய்க்காட்டி இருக்கிறார் அநுர. இலங்கையின்ர ஜனாதிபதிமாருக்கு யாழ்ப்பாணம் வாறதெண்டது கிட்டத்தட்ட ஒரு வெளிநாட்டுப் பயணம் மாதிரித்தான். ஜனாதிபதிமார் வரேக்க காணாமல் ஆக்கப்பட்டவை கட்டாயம் போராட்டம் நடத்துவினம். அதோட இந்தமுறை செம்மணிப்பிரச்சினையும் பெரிசா இருக்கிறதால அப்பிடி ஏதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடக்குமோ எண்டது அநுரவின்ர பயம். அப்பிடித் தான் வரேக்க சனம் எதிர்ப்புக்காட்டினால்,அதைப் பொலிஸ்காரர் கடுமையா அடக்க வெளிக்கிட்டால் யாழ்ப்பாணப் பயணத்தின்ர நோக்கமே பாழாப்போடும் எண்டது அநுரவுக்கு விளங்கியிருக்குது. அதால "இந்தமுறை யாழ்ப்பாணத்துக்கு எப்ப போறன், எப்ப வாறன் என்டதையெல்லாம் ரகசியமா வைச்சிருங்கோ" எண்டு தன்ர பாதுகாப்புப் பிரிவுக்காரருக்கு அநுர சொல்லியிருக்கிறார். அவையளும் முதலாம் திகதி ஜனாதிபதி வாறர் எண்டு மட்டும் உரிய தரப்புகளுக்கு அறிவிச்சவையே தவிர மேற்கொண்டு ஒரு விவரமும் சொல்லேலை.

அநுர இந்தமுறை யாழ்ப்பாணம் வந்ததும் முதல் புரோக்கிராம், மயிலிட்டித்துறைமுகத்துக்குப் போறதுதான். விடிய 10 மணிக்கு அங்க அநுர போறதெண்டால், யாழ்ப்பாணத்துக்குக் குறைஞ்சது ஏழு, எட்டு மணிக்கெண்டாலும் வந்திருக்கவேனும். ஆனால் அநுர 8 மணி தாண்டியும் வந்துசேரேலே எண்டு இன்ரலிஜெண்ட்காரர் கடும் குழப்பம். 31 ஆம் திகதி சாமமே ஆமிப்பொயின்றுகளைத் தாண்டி அநுர தாண்டிட்டார் எண்ட ரிப்போர்ட் மட்டும் தான் அவைக்குக் கிடைச்சிருக்கு. ஆனால் பிறகு அநுர வந்தாரா, இல்லையா? எண்டதும், அப்பிடி வந்திருந்தால் எங்க நிக்கிறார் எண்டும் தெரியாமல் இன்ரலிஜெண்ட்காரர் இரவிரவா ஓடித்திரிஞ்சிருக்கினம். கடற்றொழில் அமைச்சருக்கும், திசைகாட்டியின்ர யாழ்ப்பாண எம்.பி.மாருக்கும் போனுக்கு மேல போன் பண்ணியும் கேட்டிருக்கினம். ஆனால் அவைக்கும் ஒண்டும் தெரியேலை. கடைசியாப் பார்த்தால், படை பட்டாளம் ஒண்டுமில்லாமல் தனிக்காரில மயிலிட்டிக்கு அநுர போனபிறகுதான் அவர் யாழ்ப்பாணத்துக்குள்ள பத்திரமா வந்துசேர்ந்திட்டார் எண்டது இன்ரலிஜெண்ட்காரருக்குத் தெரிஞ்சிருக்கு.

உண்மையில நேற்று விடியப்பிறம் 1 மணிக்கே அநுர யாழ்ப்பாணம் வந்திட்டார். அமைச்சரும், எம்.பி.களும் ஓட்டைவாயள் எண்டதால அவைக்கும் எங்க நிக்கிறன் எண்டு அவர் அறிவிக்கேலை. முந்தி (ஆட்சிக்கு வர முதல்) அநுர யாழ்ப்பாணம் வரேக்க தட்டாதெருச் சந்திக்குக் கிட்டவுள்ள வீட்டுக்காரர்தான் அவருக்கு அடைக்கலம் குடுக்கிறவை. இந்தமுறையும் அவர் ஆருக்கும் தெரியாமல் அந்த வீட்டிலதான் இரவு வந்து தங்கியிருந்திட்டு, விடிய மயிலிட்டிக்குப் போயிருக்கிறாராம். அது தெரியாமல்தான் இன்ரலிஜெண்ட்காரர் தலையைப் பிய்ச்சவையாம். என்ன இருந்தாலும் பழசை மறக்காமல், முந்தின மன்னர்மார் ஆருக்கும் தெரியாமல் நகர்வலம் போறமாதிரி முந்தி அடைக்கலம் குடுத்தவை வீட்டில போய் அநுர நிண்டதெல்லாம் வேற லெவல் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். வீண் செலவுகளும் ஏற்படும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும். அம்பிகையை வழிபடுவது நன்று.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் தேவைப்படுகிறது.

**கன்னி:** உற்சாகத்துடன் செயற்படும் நாள். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். இன்று ஆஞ்சநேயரை வழிபடுவது நன்று.

**துலாம்:** திலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனஸ்தாபம் நீங்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். அலைச்சல் ஏற்படும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வழக்கமான பணிகளில் பொறுமையுடன் செயற்படவும். இன்று துர்கையை வழிபடுவது நன்று.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையக்கூடும். காரியம் இழுபறியாகி முடியும். வியாபாரத்தில் விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்குத் தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவருடன் அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். உடல்நலனில் கவனம் தேவை.




### இலங்கையில் முதன் முறையாக

# John Deere நீண்டகால வாடிக்கையாளர்களுக்கு சிங்கரிடமிருந்து வெகுமதிகள் பகிர்ந்தளிப்பு

சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம், தனது நீண்டகால John Deere வாடிக்கையாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வைபமொன்றை அண்மையில் தம்புளை சன்னஸ ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது தெரிவுசெய்யப்பட்ட நீண்டகால வாடிக்கையாளர்கள் 30 பேருக்கு சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இதனை சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மஹேஷ் விஜேவர்தன அடங்கலான விசேட விருந்தினர்கள் வழங்கியிருந்தனர். அதற்கு மேலதிகமாக, வாடிக்கையாளர் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு John Deere டிராக்டருக்கும் ரூ. 250,000 விலைக்கழிவும் வழங்கப்பட்டது. டிராக்டர் வாடிக்கையாளர்களுக்காக இது போன்ற நன்றி தெரிவிக்கும் வைபவமொன்று இலங்கையில் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2019 ஆம் ஆண்டு முதல் சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் இலங்கையில் John Deere டிராக்டர்களுக்கு ஏக விற்பனைப் பிரதிநிதியாக இயங்குகிறது. John Deere 5047D, 5045D மற்றும் 5050D வகை டிராக்டர்கள் சந்தையில் தற்போது புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக, இந்நிகழ்வில் கலந்துகொண்ட நீண்டகால வாடிக்கையாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மஹேஷ் விஜேவர்தன கருத்துத் தெரிவிக்கையில், "சிங்கர் நிறுவனத்தையும், John Deere நாமத்திலும் நம்பிக்கை கொண்டு எம்முடன் நீண்ட காலமாக இணைந்திருப்பதையிட்டு நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். உலகின் சிறந்த தொழினுட்பத்துடன் எதிர்காலத்திலும் John Deere டிராக்டர் மற்றும் உதிரிப்பாகங்கள் உங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு சிங்கர் ஸ்ரீலங்கா தம்மை அர்ப்பணித்துள்ளது" - என்றார்.

John Deere டிராக்டரை இலங்கை முழுவதிலும் காணப்படும் சிங்கர் ஸ்ரீலங்கா காட்சியறைகளிலிருந்தும் விற்பனைப் பிரதிநிதிகளிடமிருந்தும் கொள்வனவு செய்யமுடியும். தமது வாடிக்கையாளர்களுக்காக விசேட நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் சிங்கர் ஸ்ரீலங்கா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.




# தனிநாயகம் அடிகளாரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு



மன்னார், செப். 2

தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் 45ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுத் திங்கட்கிழமை மன்னாரில் நினைவுகூரப்பட்டது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகரப் பகுதியில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், தமிழ்ச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

ஒரு நண்பனைப் பெறுவதற்கான ஒரே வழி, நாம் ஒருவருக்கு நண்பராக மாறுவதுதான்.

ரால்ப் வால்டோ எமர்சன்


## திட்டங்கள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம்

ஆட்சி என்ற போதை மிகப்பொல்லாதது. சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை மறக்கடித்து, தன்னிலைகெடவைத்து, கண்ணை மறைத்து பாதாளத்தில் வீழ்த்திவிடும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இப்படிப்பட்ட ஆட்சியதிகாரப் போதைக்குள்தான் ஆரம்பத்தில் மூழ்கியது. எதிர்பாராத வகையில் ஜனாதிபதித்தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றில் அடுத்தடுத்துக் கிடைத்த விஸ்வரூப வெற்றிக்களிப்பில் என்ன செய்வதென்று திசைகாட்டியினருக்குத் தெரியவில்லை. சகட்டுமேனிக்குச் சட்டங்களையும், திட்டங்களையும், கூடவே பட்டங்களையும் போட்டனர். ஆனால் பட்டங்கள் பல்லிளித்து, திசைகாட்டி அரசாங்கத்தின் முதலாவது சபாநாயகர் தன் பதவியைத் துறக்குமளவுக்குக் காலைவாரின. வெறும் காகித அரசாங்கமாக, செயலில்காட்டுவதை விடுத்து எல்லாவற்றையும் சொற்களில் மட்டுமே வெளிப்படுத்துவதாகவே தேசிய மக்கள்சக்தியின் இவ்வளவுநாள் நகர்வுகள் இருந்தன. வெற்றிப்போதையின் கிறுகிறுப்பில் இருந்து இப்போது மெல்ல மெல்ல திசைகாட்டியினர் வெளியே வந்துகொண்டிருக்கின்றனர். அவர்களின் அண்மைக்காலச் செயற்பாடுகள் அதனையே கட்டியம் செய்கின்றன.

ரணில் உள்ளிட்ட அரசியல்புள்ளிகளைக் கைதுசெய்தமை, வெளிநாட்டில் ஒளித்திருந்த பாதாளக் கும்பலைப் பிடித்து நாட்டுக்குள் கொண்டுவந்தமை, பட்டலந்த வதைமுகாம், ஈஸ்டர் தாக்குல் போன்ற நாட்டையே உலுக்கிய விவகாரங்களின் மீள்விசாரணைகளை முடுக்கிவிட்டமை என மக்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் ஒரு போராளிக்குழுவுக்கான பாணியில் திசைகாட்டி அரசாங்கம் தன் நகர்வுகளை அண்மைக்காலமாக முன்னெடுத்துள்ளது. எப்படித் தென்னிலங்கை மக்களைத் திசைகாட்டியினர் இப்போது தம்வசப்படுத்தி இருக்கின்றனரோ அதேபோன்று, வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்மக்களின் மனதிலும் நிரந்தர இடத்தைப் பிடித்துவிடவேண்டுமென்பதிலும் தேசிய மக்கள் சக்தி திட்டம் போட்டுக் காரியமாற்றிக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் என்றுமில்லாதவகையில் தமிழ்மக்களின் வாக்குகளும் மாற்றத்தின் அலையில் அள்ளுண்டு, தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்திருந்தன. ஆனால் அதன் பின்னர் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் முன்னைய இரு தேர்தல்களிலும் கிடைத்ததைப் போல பெருவாரியான வாக்குகளை தேசிய மக்கள் சக்தியால் பெறமுடியவில்லை. எனவே வடக்கிலும், கிழக்கிலும் எப்படி ஆழமாக வேரூன்றுவது என்று இப்போது பார்த்துப் பார்த்து திட்டங்களை இந்த அரசாங்கம் போடத் தொடங்கியிருக்கிறது.

அதில் ஓர் அங்கமே ஜனாதிபதி அநுரகுமாரவின் யாழ்ப்பாண வருகை. தான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகும் சந்தோசத்தை வடக்கு மக்களுடன் பகிர அநுர ஆசைப்பட்டமைக்கும் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இதுவரை தமிழ் மக்களின் வாக்குகளை அள்ளிய தமிழ்த்தேசியக் கட்சிகள் தமது கொள்கைகளைக் காற்றில்பறக்கவிட்டு, வாக்குஅரசியலுக்கானகூட்டணிகளை அமைத்துள்ளன. சில கட்சிகள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதை விடுத்து, தமது உள்வீட்டுக் குத்துவெட்டுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. எனவே இந்தக் கட்சிகள் மக்களரசியல் என்ற நிலையில் இருந்து தூரப்போய்க் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், மாற்றுத்தெரிவாக தம்மை வெளிப்படுத்தி, இங்கே காலூன்றுவதுதான் தேசிய மக்கள் சக்தியின் திட்டம். அது ஓரளவுக்குப் பலனளிக்கும் என்றே தோன்றுகின்றது. மயிலிட்டித்துறைமுக அபிவிருத்தி அங்குரார்ப்பண நிகழ்வை மிக எளிமையாக நடத்தியமை, யாழ். மாவட்டச் செயலகத்தில் திறந்துவைக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வுப் பணியகத்தின் கல்வெட்டில் 'பொதுமக்களின் நிதியில் ஜனாதிபதியால் திறந்துவைக்கப்பட்டது' என்பது போன்ற வாசகப்பொறிப்புகள் எல்லாமே, ஒருவகையில் ஜனரஞ்சகத் தூண்டிகளே. இதுவரை ஆட்சியாளர்கள் கல்வெட்டுகளில் தமது பெயரைப் பெரிதாகப் பொறித்து, தமது நிதியிலேயே அபிவிருத்திகள் நடந்ததாகக் காட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தநடைமுறையைத் தூக்கியெறிந்துவிட்டு, மக்களின் பணத்தில் ஜனாதிபதியால் திறந்துவைக்கப்பட்டது என்று தன்னை மக்களின் அரசாங்கமாகக் காட்டிக் கொள்ள அநுரகுமாரவும், அவரின் திசைகாட்டிக் கட்சியும் எண்ணுகின்றனர். தமிழ்த் தேசியக்கட்சிகள் அடுத்த வழக்குத் தவணை எப்போது? என்று எண்ணிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் திசைகாட்டி மிகப்பலமாக இங்கே காலூன்றி மக்களின் மனங்களுக்குள்ளும் ஊடுருவத் தொடங்கிவிட்டது என்பதே உண்மை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## காத்திரமான சட்டத்தை உருவாக்கி பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குங்கள்

*சட்டத்தரணி பிரதீபா மஹாநாம தெரிவிப்பு*



**கொழும்பு, செப். 2**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும், அதே நேரம் திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தைத் தடுக்கும் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டம் இரத்துச் செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது. அதனால் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் இரத்துச் செய்யப்படும் அதேநேரத்தில், திட்டமிடப்பட்ட குற்றச் சட்டத்தையும் முன்னிலைக்குக் கொண்டுவரவேண்டும் - என்றார்.

அதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய்வது என்பதுதேர்தல்விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட விடயமாகும். அதனால் செப்ரெம்பர் மாத ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய்யும் வரைவை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். (ச-இ)

## பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை



கொழும்பு, செப்.2

எரிபொருள் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திருத்தப்பட்டபோதும், பஸ் கட்டணங்களில் மாற்றம் ஏற்படாது என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மாதாந்த எரிபொருள் விலைத்திருத்தச் சூத்திரத்தின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் பெற்றோல், ஓட்டோ டீசல், சுப்பர் டீசல் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## ஆசனப்பட்டி கட்டாயம்

கொழும்பு, செப்.2

அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் அனைத்து வாகனங்களின் பயணிகளும் ஆசனப்பட்டி அணிவது நேற்றுமுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாறாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன தெரிவித்துள்ளார்.

அதேநேரம், ஆசனப்பட்டி இல்லாத சில வாகனங்களுக்கு ஆசனப்பட்டி பொருத்த 3 மாதகால அவகாசம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## 'செயிரி வாரம்' நேற்று ஆரம்பம்

கொழும்பு, செப்.2

அரசாங்க நிறுவனங்களில் உள்ள தேவையற்ற பொருள்களை அகற்றும் விசேட திட்டம் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "செயிரி வாரம்" என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டம் நேற்று முதல் 4 நாள்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசாங்க நிறுவனங்களில் உள்ளவர்கள் தங்களின் கடமைகளைச் செய்வதற்கு ஏற்ற சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
புதன்கிழமை - ஆவணி 18
03.09.2025
சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம் : 12.05 - 01.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS 2025/06 Valikamar
# Council Fund – Stage 6

1. The Chairman, Divisional Procurement Committee (DPC), on behalf of the, Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million".
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Schedule(Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs. (T.P:021-224-0017 )
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Divisional Procurement Committee ,Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees Rs 3,500.00 only. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the Chairman, Divisional Procurement Committee ,Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam on or before 10.30 a.m as stated in table above. Bid number must be written on

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 2025.09.02 - 2025.09.16 | | | |
| | | Pre – Bid Conference | | | At 10.00 A.M On 2025.09.10 | | | |
| | | Closing and Opening of Bid | | | At 10.30A.M on 2025.09.17 | | | |
| S.No | Bid ID | Description of Work | Estimate Cost - Civil cost (Rs.Mn) | Contract Period | CIDA /ICTAD Grade & Specialty | Bid validity Period | Required Bid Security / Bank Draft/ Security Deposit — Amount | Validity Period |
| Council Fund | | | | | | | | |
| 01 | NP/14/41(15)/02/05/CF / 2025/27 | **Package 01**<br>1. Construction of Annamar kovil 1st cross lane (J/204)<br>2. Construction of Annamar kovil 2nd cross lane (J/2024)<br>3. Construction of Ilanthaikaddai veethy (J/205)<br>4. Construction of Sivaguru front lane (J/205)<br>5. Construction of Sivaguru 2nd lane (J/205)<br>6. Construction of Veerapaththirar Kovil road (J/205) – (Concrete work)<br>7. Construction of Kannaki amman kovil road (J/205)<br>8. Construction of Kannaki amman kovil by lane (J/205)<br>9. Construction of Usaththiyodai mayana by lane (J/205)<br>10. Construction of Kalikovil 1st left lane (J/205) | 6.17 | 75 Days | C8 or above (High way) | 02.12.2025 | 62,000.00 | 30.12.2025 |
| 02 | NP/14/41(15)/ 02/05/CF / 2025/28 | Construction of Munrillupaiyadi suthirakinathadi by lane (J/206) | 3.55 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 36,000.00 | 02.12.2025 |
| 03 | NP/14/41(15)/02/05/CF / 2025/29 | **Package 02**<br>1. Construction of Kurumpasiddy 2nd cross lane(J/211)<br>2. Construction of Katkaraipillaiyar kovil road (J/211)<br>3. Construction of Pechchiyamman kovil 1st cross street (J/211)<br>4. Construction of Pechchiyamman kovil 2nd cross street (J/211) – Concrete work<br>5. Construction of Pechchiyamman kovil 4th cross street (J/211)<br>6. Construction of Kurukkalvalavu joint road (J/211)<br>7. Construction of Kuppilan south cross street (J/211) | 3.47 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 35,000.00 | 02.12.2025 |
| 04 | NP/14/41(15)/02/05/CF / 2025/30 | **Package 03**<br>1. Construction of Pillaiyarkovil by lane (Balance Work) (J/208)<br>2. Construction of Katpanpulavu near Barathy Community center by leans (J/208)<br>3. Construction of Urulaikkadavai right side 1st cross lane from Palaly road (J/207)<br>4. Construction of Mathalodai Mayana veethy left site 1st cross lane ( Connected with 2nd cross lane and main road ) (J/209)<br>5. Construction of Maththalodai Mayana veethy left site 4th cross lane (J/209)<br>6. Construction of Undiyalpaddi 1st cross lane (J/209)<br>7. Construction of Veerapathirar Nagathampiran Kovil road (J/209) | 4.99 | 60 Days | C8 or above (High way) | 04.11.2025 | 50,000.00 | 02.12.2025 |
| 05 | NP/14/41(15)/02/05/CF / 2025/31 | **Package 04**<br>1. Construction of Katpaka mill road (J/203)<br>2. Construction of Puliyankinaththady 2nd cross lane (Srimurugan School west) (J/203)<br>3. Construction of Sanasamuka veethy 3ed cross lane (J/203)<br>4. Construction of Kalachchara Veethy 1st Cross lane (J/203)<br>5. Construction of Keethan kadai lane (J/203)<br>6. Construction of Thinnai East road (J/203)<br>7. Construction of Puliyady road balance work (J/203) | 3.64 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 37,000.00 | 02.12.2025 |
| 06 | NP/14/41(15)/02/05/CF / 2025/32 | **Package 05**<br>1. Construction of Vanappulam Road (J/197)<br>2. Construction of 3rd by Lane of Railway Station 1st Cross Road (J/197)<br>3. Construction of 2nd Cross Road of Alavavodai Road (J/197)<br>4. Construction of Vellavaikkal -Mathavady - Concrete Work (J/197)-<br>5. Renovation of Mylani school road Shoulder work<br>6. Renovation of Vairavar Kovil Road Balance Work (J/197) –Re tarring<br>7. Renovation of Thillaikaddy Road (J/197) – Re Tarring<br>8. Renovation of Mylani North , Saddatharani Sellathurai Road & Railway Station Road (J/197) – Repair work | 3.47 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 35,000.00 | 02.12.2025 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...am South Prad eshiya Sabha, Chunnakam
# ...6 & Stamp Duty Projects

the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam

8. Pre-Bid Conference will be held at Caltural Hall, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam, commencing at 10.00 AM as stated in table above.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07 | NP/14/41(15)/02/05/CF / 2025/33 | **Package 06**<br>1. Construction of 1st by Lane of Vizlakkady Road (J/199) -Concrete work<br>2. Construction of 2nd by Lane of St. Anthony's Kovil Road (J-198) - Concrete work<br>3. Construction of Iyanar Cross Road (J/198) - Concrete work | 2.63 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 27,000.00 | 02.12.2025 |
| 08 | NP/14/41(15)/02/05/CF / 2025/34 | **Package 07**<br>1. Construction of 1st by Lane of Kandaiyah Upaththiyar Road (J-186)<br>2. Construction of 1st by Lane of Pudny Road (J-186)<br>3. Construction of 1st by Lane of Mayana Veethy 1st Cross Road (J-200)<br>4. Construction of 1st by Lane of Kali Kovil Road (J-186) - Concrete<br>5. Construction of Paruththiyollai by Road of College Road (J-200) – Concrete work | 3.39 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 34,000.00 | 02.12.2025 |
| 09 | NP/14/41(15)/02/05/CF / 2025/35 | Renovation of Thulminiyan thoddam 3rd lane (J/187) | 2.66 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 27,000.00 | 02.12.2025 |
| 10 | NP/14/41(15)/02/05/CF / 2025/36 | **Package 08**<br>1. Renovation of Kaithady Manipay Road - Dutch Road Joint Road (J-185)<br>2. Construction of Ambalavanar 12th Cross Road (J-185) - Concrete Work<br>3. Construction of 1st by Lane of Athipar Sivagi 6th Cross Road (J-185)- Concrete Work | 3.39 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 34,000.00 | 02.12.2025 |
| 11 | NP/14/41(15)/02/05/CF / 2025/37 | **Package 09**<br>1. Construction of 10th Cross Road of Sabapathypillai Road (J-196)<br>2. Construction of 5th Cross Road of Old Police Station Road (J-196)<br>3.Construction of 8th Cross Road of Kumarasamy Pulavar Road (J/196) | 3.39 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 34,000.00 | 02.12.2025 |
| 12 | NP/14/41(15)/02/05/CF / 2025/38 | **Package 10**<br>1.Renovation Of Kalajothy community center front lane - (J/190)<br>2.Construction of Kovil road Blance work (J/190) - Tar & Concrete work<br>3. Construction of Vilaththiyady by lane (J/190) | 3.36 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 34,000.00 | 02.12.2025 |
| 13 | NP/14/41(15)/02/05/CF / 2025/39 | **Package 11**<br>1. Construction of Gnanaprakasar Cross lane - 1 (J/182)<br>2. Construction of Karuththanvadali cross lane (J/182)<br>3. Construction of Paddiolai Cross lane (J/182)<br>4. Construction of Pariyolai cross lane (J184)<br>5. Construction of Puthumadam cross lane (J/182) - Concrete Work<br>6. Construction of Siththivinyakar cross lane (J/182) - Tar & Concrete work<br>7. Construction of Thunmalai road cross lane (J/183)<br>8. Construction of Transformer cross lane (J/182)<br>9. Construction of Sinkam Cross lane (J/182) | 3.43 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 35,000.00 | 02.12.2025 |
| 14 | NP/14/41(15)/02/05/CF / 2025/40 | **Package 12**<br>1. Construction of Malvam 2nd cross lane (J/184)<br>2. Construction of Gnanapirakasar Cross lane -2 (J/184)<br>3. Construction of Puliyady Vairavar 3rd cross lane (J/184)<br>4. Construction of Puliyady Vairavar cross lane (J/184)<br>5. Construction of Vilvakudayan Cross road (J/184)<br>6. Construction Malvam cross Road (J/184)<br>7. Renovation of Katpakapillaiyar lane (J/183) | 5.59 | 75 Days | C8 or above (High way) | 02.12.2025 | 56,000.00 | 30.12.2025 |
| 15 | NP/14/41(15)/02/05/CF / 2025/41 | **Package 13**<br>1. Construction of Pappathodda veethy 2nd lane (J/191)<br>2. Construction of Pappathodda veethy 5th by lane (J/191)- Concrete work<br>3. Construction of Vanniyasingam veethy (Kekkilippan Junction) (J/188)<br>4. Construction of Singaththingaladdi 1st lane (J/191) - Tar & Concrete work<br>5. Construction of Singaththingaladdi 2nd lane (J/191)<br>6. Construction of Singaththingaladdi 3rd lane (J/191)<br>7. Construction of Pararajasekara pillaiyar kovil 1st lane (J/188)<br>8. Construction of Vicneswara veethy (J/188) - Concrete work | 3.47 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 35,000.00 | 02.12.2025 |
| 16 | NP/14/41(15)/02/05/CF / 2025/42 | **Package 14**<br>1. Construction of Anna coffee 1st lane (J/194)<br>2. Construction of Ulavar veethy 6th lane (J/194)<br>3. Construction of Oor ellai vairavar Kovil Opposite lane - Concrete road (J/194)<br>4. Construction of Arasady veerapaththirar Kovil lane (J/194)<br>5. Construction of Arasady 2nd lane (J/194) | 3.47 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 35,000.00 | 02.12.2025 |
| 17 | NP/14/41(15)/02/05/CF / 2025/43 | **Package 15**<br>1. Construction of Mohan veethy Kaali kovil 3rd by lane - Concrete work (J/192)<br>2. Construction of Mohan veethy Kaali kovil 5th by lane (J/192)<br>3. Construction of Thavady manipay road 5th lane (J/192)<br>4. Construction of Paththanai paththirakaali kovil back lane (J/192) | 3.73 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 38,000.00 | 02.12.2025 |
| **Stamp Duty Fund** | | | | | | | | |
| 18 | NP/14/41(15)/02/05/ Stamp Duty/2025/01 | Renovation of Somaranthoddam road at Uduvil North | 3.80 | 60 Days | C9 or above (High way) | 04.11.2025 | 38,500.00 | 02.12.2025 |

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam South Pradeshiya sabha,**
**Chunnakam.**

**02.09.2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் தினமும் முத்தமிழ் விழாவும்

யாழ்ப்பாணம், செப்.2
மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் முத்தமிழ் விழாவும் திருவள்ளுவர் தினமும் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நாளை புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளன.
அதிபர் இ. நாகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய நிர்வாக அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ஸ்ரீகுமரன், சிறப்பு விருந்தினராக வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்ன, மதிப்புறு விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆசிரியர் சி.சுந்த்ரமூர்த்தி, வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியை திருமதி மா.கந்தையா ஆகியோர் கலந்துகொள்வுள்ளனர். (எ-25,9)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 22 . 03 . 1941



தேவனின் கரங்களில் 31 . 08 . 2025

### அமரர் மரியாம்பிள்ளை யோசேப்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை யோசேப் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (31.08.2025) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், மேரி யோசேப்பின் இன் அன்புக் கணவரும், மார்ட்டீன் ஜோன் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், றோஷானி (ஆசிரியை - மு/கருநாட்டுக்கேணி அ.த.க பாடசாலை), போல் அன்ரனி (Bahrin) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜோர்ஜ் இம்மானுவேல், மேரி நிறோஷினி ஆகியோரின் மாமனாரும், அன்ரனிற்றா, அனிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேரனும், மேரியேட்றூட் இன் அன்புச் சகோதரனும், மேரி அன்ரனற் (வசந்தி), எட்மன் அமலநாதன் (மோகன்), மதுரநாயகம் (அசோகன்), காலஞ்சென்ற வின்சன், டனிஸ்லஸ் (றஞ்சன்), றெபேக்கா (சாந்தி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (03.09.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பிற்பகல் 03.00 மணியளவில் நல்லடக்க ஆராதனைக்காக அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக அளவெட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அலுக்கை,**
**அளவெட்டி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்**
**076 936 6380**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 59294) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 07 . 1940



மறைவு 31 . 08 . 2025

### அருணாசலம் திருநாவுக்கரசு (J.P)

**(ஓய்வுநிலை அதிபர் - யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்)**

பெரிய நாவலடியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை வசிப்பிட மாகவும் கொண்ட அருணாசலம் திருநாவுக்கரசு கடந்த 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சிவபாக்கியவதியின் அன்புக் கணவரும், சிவோத்தமன் (நியூசிலாந்து), சிவகஜன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), யசோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், டக்சாயினி (நியூசிலாந்து), பானுஜா (பிரதி முகாமையாளர் மக்கள் வங்கி-சாவகச்சேரி), சிவயோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், டக்ஷன், (நியூசிலாந்து), டக்சிகா, (நியூசிலாந்து), கஜீன், கரீஸ், ஹாரவி, ஜீவாஞ்சனா, டுவாரகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2025) புதன்கிழமை காலை 08.30 மணியளவில் கச்சாய் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணியளவில் கொடிகாமம் வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 65 44 375**

## பணியாளர் தேவை

நீண்ட காலமாக யாழ்நகர் மத்தியில் அமைந்துள்ள பிரபல உணவகம் ஒன்றிற்கு தேநீர் தயாரிப்பாளர், றொட்டி தயாரிப்பாளர், சமையல் உதவியாளர் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும், தங்குமிட வசதியும் உண்டு.

**தொடர்புகளுக்கு: 077 119 0011**

(CS 59291)A

## கொப்பறா விற்பனை

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா 06.10.2025 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் தேருக்கு உடைக்கப்படும் தேங்காய் கொப்பறா விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் **05.10.2025 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர்** எழுத்து மூலம் **செயலாளர் ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்** என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும். கூடுதல் கேள்வி கோருபவருக்கு கொப்பறா வழங்கப் படும்.

**குறிப்பு:-**
அன்றைய தினமே பணத்தை செலுத்தி கொப்பறாவை பெற்றுக்கொள்ள வேண்டும்.

பரிபாலன சபை

(CS 59293) A

## மரண அறிவித்தல்

மலர்வு 12 . 08 . 1932



உதிர்வு 29 . 08 . 2025

### மேரி திரேசா பேதுருப்பிள்ளை

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கரம்பொனை வசிப்பிடமாகவும், கனடாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட மேரி திரேசா பேதுருப்பிள்ளை தனது 93 ஆவது வயதில் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்திநாதர் - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பேதுருப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜேற்றூட்டம்மா, ஜேம்ஸ், இராசேந்திரம், ஞானம்மா, மரியதாஸ் இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை, மேரி திரேசா சின்னராணி, றெஜீனா, யோசவ் மற்றும் புஸ்பம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், புவிராஜா (ஜேர்மனி), யோகராஜா (கனடா), கொறற்றி (லண்டன்), வசந்தா (கனடா), நவராஜா (ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பெலிசியா, நிர்மலா, வசிகரன், ஜெயராஜா கனிபல், சுறேஜினி (ஆசிரிய ஆலோசகர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், பிறிமினோ, பிறிஸ்றோ, டயான், யுவானா, வினோசினி, வினோசிபன், றமின்டியா, பியங்கா, ஹறீனா, அருள் ஜீவிதன், ஜீவசொரூபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2025) செவ்வாய்க்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மகன்**
**P.W.நவராஜா**
**077 6872 711**

(CS 59292) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு தேசிய மருத்துவமனையில் காலாவதி இரசாயனப்பொருள்கள்

## உள்ளக விசாரணை ஆரம்பம்


கொழும்பு தேசிய மருத்துவமனையில் கடந்த காலங்களில் காலாவதியான இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சின் மட்டத்தில் உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இரண்டு கோடி ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான இரசாயனப் பொருள்கள் தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகம் விசாரணை நடத்தியுள்ளதோடு, மருத்துவமனையின் உள்ளக ஆய்வுகூடங்களில் காலாவதியான இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி பரிசோதனைகள் நடத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆய்வுகூடங்களில் அதிக பெறுமதியான காலாவதியான இரசாயனப் பொருள்கள் இருப்பதனால், காலாவதியான இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி ஆய்வகப் பரிசோதனைகளை மேற்கொள்ளும்போது ஆபத்து மற்றும் முறைகேடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அந்தக் கணக்காய்வு விசாரணையில் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் ஆய்வக இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான கணக்காய்வு விசாரணை குறித்து சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்கவிடம் வினவியபோது, 'இந்தச் சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது' - என்றார். (ச-இ)

# மரண அறிவித்தல்



## நடராசா கயிலாயர்

யாழ் துன்னாலை கோவிற்சந்தையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட நடராசா கயிலாயர் அவர்கள் (30.08.2025) துன்னாலை கோவிற்சந்தையில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான றெஜிஸ்ரார் சபாவதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், திருச்செல்வி (பபி), இளஞ்செல்வி (உஷா) ஆகியோரின் அன்பு தந்தையும், நந்தகுமார், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், தங்கராஜா, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை (03.09.2025) முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று வேரோண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 916 5270, 077 228 9413

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.2

வேலணை வடக்கு இலந்தை வனப்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 11தினங்கள் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 10மணிக்குத் தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. அன்றையதினம் "மஹோற்சவத்தில் இரதோற் சவம்" எனும் விடயப்பொருளில் தெய்வீகப் பேருரையை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார் என ஆலய அறங்காவலர் அறிவித்துள்ளார். (எ-41)

# சந்நிதியான் ஆச்சிரம விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.2

வரலாற்றுச் சிறப்புப்பெற்ற செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளாந்தம் விசேட நிகழ்வுகள் காலை 10மணிக்கு ஆச்சிரமத்தின் சுவாமிகள் மோகனதாஸ் தலைமையில் நடைபெற்றுவருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜெ.கோபிராஜ் "சைவத்தின் பெருமை" எனும் பொருளில் சொற்பொழிவும், நாளை புதன்கிழமை காலை 10மணிக்கு உளவளத்துணையாளர் நா.நவராஜ் "திருமுருகாற்றுப்படை" எனும் பொருளில் சொற்பொழிவும், நாளைமறுதினம் வியா ழக்கிழமை காலை 10மணிக்கு சைவப்புலவர் ச.முகுந்தன் "கந்தபுராணம் காட்டும் வாழ்வியல்" எனும் பொருளில் சொற்பொழிவும் ஆற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-131)

## ஐரோப்பிய நாடுகளில்

# தலைமறைவாகியுள்ள பாதாளக் குழுக்களுக்கு 'செக்'

கொழும்பு, செப்.2

டுபாய் , ஐரோப்பிய நாடுகளில் தலைமறைவாகி இலங்கையில் பல்வேறு குற்றங்களை மேற்கொண்டுவரும் 18 பாதாள உலக நபர்களை அந்த நாடுகளில் கைது செய்து மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன.

இந்த 18 நபர்கள் மற்றும் அவர்கள் இருக்கும் இடம் குறித்த தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அவர்கள் தற்போது கண்காணிக்கப்பட்டுவருகின்றனர் என்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன்படி, வெளிநாடுகளில் பதுங்கி இருக்கும் 75 இலங்கையர்களுக்குச் சிவப்புப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)




# தே.ம.சக்தி மீது மக்களுக்கு அளவுகடந்த நம்பிக்கை

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.2

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்மீது மக்களுக்கு அளவு கடந்த நம்பிக்கையுள்ளது. படிப்படியாக சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அண்மையில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க கைதானது எல்லாத் திருடர்களையும் வெளிக்காட்டியுள்ளது. கூட்டுச் சேர்ந்தவர்கள் எல்லாம் படிப்படியாக சிறை செல்லப் போவது அவர்களுக்குத் தெரியும். பாதாள உலகக் குழுக்களை இயக்கியவர்கள் வெளிநாடுகளில் தங்கியிருந்தநிலையில் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர். புலனாய்வுப்பிரிவு மற்றும் பொலிஸ் பிரிவை சுயாதீனமாக இயங்கவிட்டிருக்கின்றோம். கடந்த காலம் என்றால் அரசின் அழுத்தம் காரணமாக இவ்வாறு செய்யமாட்டார்கள். இவர்களின் கைதினூடாக பல அரசியல்வாதிகளின் பெயர்கள் தெரியவரவுள்ளன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்மீது மக்களுக்கு அளவு கடந்த நம்பிக்கையுள்ளது. சட்டம் தன் கடமையைச்செய்யும் - என்றார் . (ச-113)

# தேர்தல் கணக்கறிக்கை குளறுபடி வேட்பாளர்கள்மீது சட்டநடவடிக்கை

தேர்தல் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத ஜனாதிபதி வேட்பாளர்கள் 13 பேர் மற்றும் நாடாளுமன்ற வேட்பாளர்கள் 695 பேரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகத்தின் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் 833 பேர் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, மேலும் 86 வேட்பாளர்கள் தொடர்பான தகவல்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதற்கிடையில், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் 5 பேர் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் 74 பேருக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்காக கோப்புகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் - வாகனம் விபத்து; மூவருக்குப் படுகாயம்!

## வவுனியாவில் நேற்றுக் கோரம்

வவுனியா, செப். 2

வவுனியாவில் நேற்று ரயிலும், பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்கு உள்ளானதில், நான்கு வயதுக் குழந்தை உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் உள்ள ரயில் கடவையிலேயே இந்தக் கோரவிபத்து இடம்பெற்றுள்ளது. வாகனத்தில் பயணித்த கணவன், மனைவி மற்றும் அவர்களுடைய நான்கு வயதுக் குழந்தை ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.



விபத்து இடம்பெற்ற கடவையில் ஊழியர் ஒருவர் 24 மணிநேரமும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். எனினும், ரயில் செல்லும்போது மூடப்பட வேண்டிய பாதுகாப்புக் கடவை, மூடப்படாதமையே இந்த விபத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-110-113)

விதை நெல் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.

077 659 2044

(CR/45925) J-1

### பெயர் மாற்றம்

ஊரெழு மேற்கு சுன்னாகத்தில் வசிக்கும் சிறிகாந்தன் கஜீபா ஆகிய நான் எனது பெயரை சிறிகாந்தன் சித்தி கதீஜா என மாற்றம் செய்கின்றேன்.

சிறிகாந்தன் சித்தி கதீஜா

### கச்சதீவுக்குள்...

தமிழகத்தில் எதிர்வரும் வருடத்தின் இரண்டாவது காலாண்டில் தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தேர்தலில் பல்வேறு கட்சிகளும் தமது பிரதான தேர்தல் பரப்புரைக் களமாக கச்சதீவைப் பயன்படுத்தி வருகின்றன. கச்சதீவை இலங்கையில் இருந்து மீட்டு, தமிழக மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதாகவே பல்வேறு கட்சிகளும் வலியுறுத்திவரும் நிலையில், ஜனாதிபதி அநுர கச்சதீவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளமை இராஜதந்திர வட்டாரங்களில் மிகவும் முக்கியமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர், 'கச்சதீவு இலங்கைக்குரியது. அதை இந்தியாவிடம் ஒப்படைக்கும் எண்ணம் இலங்கைக்கு இல்லை. இந்த விடயம் தொடர்பில் இராஜதந்திரிகள் எவரும் கருத்துத் தெரிவிக்கவில்லை. தேர்தலை அடிப்படையாக வைத்து தமிழகத் தலைவர்கள் மேற்கொள்ளும் பரப்புரைகளைக் கண்டுகொள்ளத் தேவையில்லை' என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். அதை நிரூபிக்கும் வகையிலேயே அநுரவின் நேற்றைய பயணம் அமைந்திருந்ததாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(அ-ம-26)

### சர்வதேச...

பட்டன. வடமாகாணத்தின் முதலாவது சர்வதேச கிரிக்கெட் மைதானமாகவும், இலங்கையின் ஐந்தாவது சர்வதேச கிரிக்கெட் மைதானமாகவும் மண்டைதீவில் அமைக்கப்படவுள்ள 'யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானம்' அமையவுள்ளது.

கடந்த அரசாங்கங்களின் ஆட்சிக்காலத்தில் மண்டைதீவில் கிரிக்கெட் மைதானமொன்றை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களால் நடவடிக்கைகள் பிற்போடப்பட்டு வந்தன. இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நேற்று மைதானத்துக்காக அடிக்கல் நடப்பட்டுள்ளது.


(அ-ம-26)

வேலையாள் தேவை

சர்வதேச தரத்திலான மோட்டார் வண்டி விற்பனை நிலையத்திற்கு (காட்சிக்கூடம்) கணக்காளர், மேற்பார்வையாளர், விற்பனைபிரதிநிதி, உதவியாளர் ஆகியவற்றுக்கு தகுதியுடையோர் தேவை.

தொடர்புகளுக்கு :-
077 231 1176

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 10 . 1943

மறைவு 01 . 09 . 2025

### சுப்பிரமணியம் நாகரத்தினம்

"கலம்பரை" கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகரத்தினம் அவர்கள் நேற்று (01.09.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், மதிவதனாவின் பாசமிகு தாயாரும், ஞானச்சந்திரனின் அன்பு மாமியாரும், நிருத்திகா, லோகாயிதன் (Belgium), கேதாரணி, கயதீபன், கயனி பார்த்தீபன் (Switzerland), சுபஸ்திகன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், கபினயாவின் அன்பு பூட்டியும், சரஸ்வதி, இராசரத்தினம், நாகேஸ்வரி, பரமேஸ்வரி, மகாலிங்கம், ரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, நல்லம்மா, இராசம்மா மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2025) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

ஞானச்சந்திரன் - 077 008 3129

(CS/59299) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 10 . 1932

மறைவு 31 . 08 . 2025

### திருமதி வேலாயுதர் இராசமணி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கு கைதடியை வசிப்பிடமாக கொண்ட திருமதி வேலாயுதர் இராசமணி அவர்கள் கடந்த (31.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி வேலாயுதர் (உடையார்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற MC ஆறுமுகம் - தங்கவேலு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான திருமதி சு.நாகேஸ்வரி, திருமதி ச.கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயக்குமாரன், ரவிக்குமாரன் (ஜேர்மனி), விஜயகுமாரன், செந்தில்குமாரன் (கனடா), சிறீக்குமாரன் (ஜெர்மனி), யசோதை ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேஸ்வரி, ஜெயந்தினி, மனோகரி, கௌரி, சறோசாதேவி, இரவீந்திரன் (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஹரிகரன், நிரோஜினி - சிவச்செல்வன், யுதீசன் - சாதனா, நிரோசன் - மக்சி, அபிநயா, விதுஷன், யதுஷன், மானுஷா, ஜனத், ஜஸ்மினி, ஜசிந்தா, தட்சாயினி - ரயூரன், தாரங்கனி - ஸ்ரீதுவாரகன், மிதுனாளினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஸ்ரீரேகா, நீனா, டியான், எமில், ஆதித்தியன், ஆவா, வேலா, ஆதிரன், ஆதிஷன் ஆகியேரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:-
077 774 6872 - மகள்
077 926 0907 - மகள்

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயிலிட்டித்...

முகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழான அபிவிருத்திப் பணிகளே ஜனாதிபதி அநுரவால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மயிலிட்டித் துறைமுகத்தின் மேம்பட்ட செயற்பாட்டை உறுதிப்படுத்தும் விதமாக, அங்கு தரித்து விடப்பட்டிருந்த இந்திய மீனவர்களின் படகுகள் அண்மைக்காலமாக உடைத்து அகற்றப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## யாழ். பொது...

ஜனாதிபதி அநுர நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். இதன் ஒரு பகுதியாகவே யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தார். அத்துடன் நூலகத்தின் இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் செயற்பாடுகளும் ஜனாதிபதி அநுரவால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் வரவு - செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாணம் பொதுநூலக மேம்பாட்டுக்காக 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு அமையவே இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஜனாதிபதியின்...

கூடிய பொதுமக்களை, பொலிஸார் பலவந்தமாக அப்புறப்படுத்தினார்கள்.

மயிலிட்டி துறைமுக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்காக ஜனாதிபதி அநுர நேற்றுச் சென்றிருந்தார். இதன்போதே, அந்தப் பகுதியில் ஒன்று கூடிய காணி உரிமையாளர்கள் ஜனாதிபதியிடம் நீதிகோரிக் காத்திருந்தனர். எனினும் பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என அனைவரும் அந்தப் பகுதியில் நிற்க விடாமல் விரட்டப்பட்டனர். வயோதிபர்கள்கூட பொலிஸாரால் இரக்கமற்ற வகையில் நடத்தப்பட்டனர்.

"மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால், எங்களின் கோரிக்கையைக் கூட செவிசாய்க்கத் தயாரில்லை. கடந்த காலங்களில் ஜனாதிபதிகள் வரும்போது நிகழ்ந்த அடாவடித்தனங்களே தற்போதும் தொடர்கின்றன" என்று காணிகளின் உரிமையாளர்கள் ஊடகங்களிடம் தெரிவித்தனர். (அ-ம-26)

## மூன்று...

தெரிவித்தார். யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் கட்டுமானப் பணிகளுக்கு நேற்று அடிக்கல் நட்டப்பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

கிரிக்கெட் என்பது பொதுவான விடயம். இலங்கையர்களை எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஒன்றிணைக்கும் விடயமாகவும் அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடர் நடைபெற்றபோது, போராளிகள் தமது ஆயுதங்களை வைத்துவிட்டு கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்த்தனர் என்று பலர் கூறிக் கேள்விப் பட்டிருக்கின்றேன். அந்தளவுக்கு எமது மக்களை கிரிக்கெட் ஒன்றிணைக்கின்றது.

எமது தேசிய கிரிக்கெட் அணியில் எந்தப் பாகுபாடும் பிரிவினையும் இல்லாமல், திறமையானவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் நிலைமை உருவாக்கப்படும். யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இந்த வருடத்தின் இறுதிக்குள் முதலாவது ஆட்டம் நடத்தப்படும். எதிர்வரும் மூன்று வருடங்களில் முதலாவது சர்வதேச ஆட்டம் நடத்தப்படும் - என்றார். (அ-ம-26)

## புலனாய்வு...

அதிகாரிகள் உட்பட அரச பெருந்தலைகள் எவருக்கும் தெரியாமல் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின்போது, முதலாவது நிகழ்வாக காலை 10 மணிக்கு மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதாக இருந்தது. ஜனாதிபதியின் பயணத்தை முன்னிட்டு புலனாய்வாளர்கள் உச்சக்கட்டக் கண்காணிப்பைச் செலுத்தியிருந்தனர். இதனால், 31ஆம் திகதி நள்ளிரவே ஜனாதிபதி இராணுவக் காவலரண்களை தாண்டிவிட்டார் என்ற தகவல் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்துள்ளது. எனினும், யாழ்ப்பாணத்துக்குள் ஜனாதிபதி நுழைந்துவிட்டாரா? அவர் எங்கு சென்றார்? என்று அவர்களால் தொடர்ச்சியாக அறியமுடியவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியாத நிலையில் நேற்று அதிகாலை பாதுகாப்பு வட்டாரங்களிலும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பின்னர் மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திப் பணிகளுக்காக எந்த வாகனத் தொடரணியும் இல்லாமல் தனி வாகனத்தில் ஜனாதிபதி சென்று இறங்கியபோதே, ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில்தான் தங்கியிருந்தார் என்ற விடயம் புலனாய்வு அதிகாரிகளுக்கும் அரச வட்டாரங்களுக்கும் தெரியவந்துள்ளது. (அ-ம-26)

**விரிவான சுவாரஸ்ய விடயங்கள் பட்சியில்.**

## போரின்போது...

போரின்போது இராணுவத்தின் பயன்பாட்டுக்காகக் கையகப்படுத்தப்பட்ட அனைத்துக் காணிகளும் விரைவில் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.

மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஜனாதிபதி அநுரகுமாரவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. நிகழ்வில் ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

போர்க் காலத்தில் பொதுமக்களின் பல காணிகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டன. அவற்றில் விடுவிக்கக்கூடிய அனைத்துக் காணிகளையும் விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் அரசாங்கம் அக்கறையுடன் உள்ளது.

அத்துடன், மீனவ சமூகத்துக்கு தேவையான வசதிகளை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். வடக்கில் மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன்மூலம் மீனவ சமூகத்துக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த அரசாங்கங்கள் போரை எதிர்பார்த்துப்பணியாற்றியிருந்தன. ஆனால், நாட்டில் மீண்டும் எந்தவிதமான யுத்தமும் ஏற்படாத வகையில் நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப தற்போதைய அரசாங்கம் பாடுபடுகிறது. நாட்டைச் சுற்றியுள்ள கடல், தீவுகள் மற்றும் காணிகளை மக்களுக்காகப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. அதில் எந்தவிதமான அழுத்தத்துக்கும் இடமில்லை - என்றார். (அ-ம-26)

## அநுரவின்...

மைதானத்துக்கு அடிக்கல் நடப்பட்ட நிகழ்வில், தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையின் பிக்குவும் கலந்துகொண்டார்.

ஜனாதிபதி அநுர அந்தப் பிக்குவிடம் ஆசீர்வாதம் பெற்ற பின்னரே விழாவில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## துப்பாக்கிச்...

உயிரிழந்துள்ளார். வவுனியா கற்பகபுரம் பகுதியைச் சேர்ந்த சந்திரசேகர் (வயது - 41) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 27ஆம் திகதி இரவு அநுராதபுரம் கெப்பற்றிக்கொலாவ பகுதியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த வாகனமொன்றை விசேட அதிரடிப் படையினர் நிறுத்தியுள்ளனர். வாகனம் நிறுத்தாமல் சென்றதைத் தொடர்ந்து, அந்த வாகனத்தின் மீது விசேட அதிரடிப் படையினரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இதன்போது இருவர் படுகாயமடைந்திருந்தனர். அவர்கள் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். அவர் சிகிச்சையின் போது நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## கடவுச்சீட்டு...

பிராந்திய அலுவலகம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்றுத் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அலுவலகம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று பேருக்கு ஜனாதிபதியால் கடவுச்சீட்டு வழங்கப்பட்டதுடன், ஒருவருடைய கடவுச்சீட்டுக்கான விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், சண்முகநாதன் ஸ்ரீ பவானந்தராஜா, ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் சுமிந்த பத்திராஜ, யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## தமிழ்மொழிக்கு...

ஜனாதிபதி அநுரவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில், பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததுடன், ஜனாதிபதியின் பெயர் அவற்றில் இடம்பெறவில்லை.

கடந்த அரசாங்கங்களின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளின்போது, பெயர்ப் பலகைகள் மற்றும் நினைவுக் கற்களில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தமிழ் மொழிக்கு இரண்டாம் இடம் கொடுக்கப்படுவதும், இடம் மறுக்கப்படுவதுமே வழமையாகும். இந்த நிலையில், ஜனாதிபதி அநுர ஆரம்பித்து வைத்த அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன், ஜனாதிபதி அநுரவின் பெயர், பெயர்ப் பலகைகளில் இடம்பெறவில்லை. 'ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது' என்றும், 'ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது' என்றுமே குறிப்பிடப்பட்டிருந்தது.

இவற்றைவிட, 'பொதுமக்களின் நிதியில்' இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டது. இவை மிக முக்கியமான விடயங்களாகப் பார்க்கப்படுகின்றன. (அ-ம-26)

## ஓரங்கட்டப்...

பணிமனை ஆரம்பித்துவைக்கப்பட்ட நிகழ்விலும், யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் இடம்பெற்ற நிகழ்விலும், மண்டைதீவில் கிரிக்கெட் மைதானத்துக்கு அடிக்கல் நடப்பட்ட நிகழ்விலும், மயிலிட்டித் துறைமுக அபிவிருத்தி நிகழ்விலும், கச்சதீவுப் பயணத்தின்போதும் ஜனாதிபதியின் பிரத்தியேக ஊடகவியலாளர்களின் செய்தி சேகரிப்புப் பணிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்கள் ஒளிப்படங்களை எடுக்கவும், வீடியோகளைப் பதிவுசெய்யவும் அனுமதிக்கப்படவில்லை. பொதுமக்களைப் போன்று பார்வையாளர்கள் வரிசையிலேயே ஊடகவியலாளர்களும் அனுமதிக்கப்பட்டனர். இதுதொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோது, 'ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு ஒளிப்படங்களையும், வீடியோக்களையும், செய்திகளையும் வழங்கும். அவற்றை வெளியிட்டால் போதும்' என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு ஊடகவியலாளர்கள் அலைக்களிக்கப்பட்டனர்.

ஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்பட்ட அதேநேரம், அரசாங்கத்துக்கு நெருக்கமான யூடியுப் பதிவர்கள் ஒளிப்படங்களை எடுக்கவும், வீடியோக்களைப் பதிவுசெய்யவும் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, செப்.2

பொல்பிதிகம, பதிரன்னேகமப் பகுதியில் விவசாயக் கிணற்றில் விழுந்து சிறுவனொருவன் உயிரிழந்துள்ளான். சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த போது வீட்டின் பின்னாலுள்ள பாதுகாப்பற்ற விவசாயக் கிணற்றில் விழுந்துள்ளான் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொல்பிதிகமப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# ஓட்டோ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 2

எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்லவாயப் பிரதான வீதியில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூவர் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்கென மொனராகலை தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் இரத்தினபுரியைச் சேர்ந்த 42 வயதுடையவராவார். ஓட்டோ வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியைவிட்டு விலகிக் குடைசாய்ந்து விபத்துள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# செம்மணிப் புதைகுழிக்கு செல்லவில்லை ஜனாதிபதி

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செம்மணிப் புதைகுழிக்குச் செல்வதைத் தவிர்த்துள்ளார்.

ஜனாதிபதி செம்மணிப் புதைகுழியையும் பார்வையிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனால், ஜனாதிபதி செம்மணிக்குச் செல்வாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. எனினும் செம்மணிக்குச் செல்வதை அநுர தவிர்த்துள்ளார். (ம-26)

# 'ஏணி' அமைப்பின் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம் செப்.2

'ஏணி' உதவும் கரங்கள் தன்னார்வ அமைப்பின் ஆரம்ப நிகழ்வு சண்டிலிப்பாய் பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

ஸ்தாபக உறுப்பினர் தே.சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன், சிறப்பு விருந்தினராக நிருசன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது பெண் தலைமைத்துவத்தின்கீழ் வாழும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ-40,63)

செம்மணிப் புதைகுழியில்

# 9 என்புத்தொகுதிகள் நேற்றும் அடையாளம்

யாழ்ப்பாணம், செப். 2

அரியாலை செம்மணிப் புதைகுழியில் இருந்து, நேற்றுமேலும் 9 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரியாலை செம்மணிப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 40 ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் 9 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளில் 7 என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 218 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 198 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-26)

# செம்மணிப் புதைகுழிக்கு நீதி வழங்குவதில் உறுதி

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 2

செம்மணிப் புதைகுழிக்கு நீதி வழங்குவதில் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழிக்கு நீதி வழங்குவதில் எமது அரசாங்கம் உறுதியுடன் உள்ளது. இந்த விடயத்தில் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளது. நீதியான நடவடிக்கைகள் அனைத்துக்கும் அரசாங்கம் உத்தரவாதம் வழங்கும். மறைப்பதற்கு ஏதும் எம்மிடமில்லை. இனிவரும் காலங்களில் இலங்கையில் இவ்வாறான நிலை ஏற்படக்கூடாது. கொடூரமான அனுபவங்கள் மீண்டும் தோற்றம் பெறாத வகையில் நாம் நடந்துகொள்ள வேண்டும் - என்றார். (ம-26)




# மோகனதாஸ் சுவாமிக்கு திருப்பெருந்தகைப் பட்டம்

யாழ்ப்பாணம், செப். 2

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் அவரது சமய, சமூக, அறப்பணிகளைப் பாராட்டி சுழிபுரம் அம்பாள் அறநெறிப் பாடசாலைச் சமூகத்தினரால் 'திருப்பெருந்தகை' எனும் பட்டம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளின் 76 ஆவது அகவை தின நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோதே அவர் கௌரவிக்கப்பட்டார். (ச-66)



# தனிநாயகம் அடிகளாரின் 45 ஆவது ஆண்டு நினைவு

வவுனியா, செப்.2

தமிழ் பெரியார் தனிநாயகம் அடிகளாரின் 45 ஆவது ஆண்டு நினைவுதினம் வவுனியாவில் நேற்றுத் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலையடியில் இடம்பெற்ற நிகழ்வில் மாநகரமுதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் மங்கள விளக்கேற்றியதுடன், திருவுரு வச்சிலைக்கு மலர்மாலையும் அணிவித்தனர். மாநகர சபையின் உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (எ-25,110)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் (இணுவிலில்) இயங்கிவரும் Kanna Kalanchiyam (PVT) LTD விநியோக நிறுவனத்திற்கு கீழ்க் காணும் பதவி வெற்றிடங்களிற்கு ஆட்கள் தேவை.

- விநியோக உதவியாளர் (ஆண்)
- கணக்காளர் (ஆண் / பெண்)
- சாரதி

தொடர்பு:- 075 999 1465

(CS/58482) J-1

## காணி விற்பனைக்கு

A9 வீதிக்கு அருகாமையில் A.V றோட் கொழும்புத்துறை என்னும் முகவரியில் உள்ள நிலப்பரப்பு 06 குழி 05 விஸ்தீரனம் கொண்ட சதுரக் காணி விற்பனைக்குண்டு.

(புனித செபமாலை அன்னை ஆலயத்திற்கு முன்புறமாகவும், தபால் கட்டடைச் சந்திக்கு அருகாமையிலும்)

தொடர்புகளுக்கு:- 077 880 5830

## வேலையாள் தேவை

வீட்டு பணிப்பெண் தேவை (30 வயதிற்குட்பட்டவர்கள், சம்பளம் 100,000 வரை வழங்கப்படும்)

தொடர்பு:- 077 258 5564

## விற்பனைக்கு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

அல்லது

- தென்மராட்சி 50,000,
- யாழ்மாவட்டம் 55,000
- வடமராட்சி 58,000

விநியோகிக்கப்படும்.

தொடர்பு:- 076 324 9977

## கனரக வாகனங்களுக்கு வீதி அனுமதி பத்திரம்

இயக்கச்சியில் இருந்து எமது மணலை யாழ் மாவட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு கனரக வாகனங்களுக்கு வீதி அனுமதிப் பத்திரம் போட்டுத்தரப்படும்.

தொடர்பு:- 076 324 9977

(CS/59295) J-1

## சாரதி தேவை

குறிப்பு :- யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 077 332 1781
077 258 6655


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் இல. 361 இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.